# அருள்மிகு நித்திய கல்யாண பெருமாள் திருக்கோயில்

திருவிடந்தை – 603112. திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

**பிரசாத கடை விற்பனை உரிமம் மற்றும் படக்கடை நடத்தும் உரிமம்**
**மறு டெண்டர் / பொதுஏலம்**

ஏலம்நாள் – 15.07.2022 வெள்ளிக்கிழமை நேரம் –11.00 மணி

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருவிடந்தை கிராமம் அருள்மிகு நித்யகல்யாண பெருமாள் திருக்கோயிலில் பசலி 1432– க்கு ( 06.08.2022 முதல் 30.06.2023 வரை ) மட்டும் கீழ் கண்ட வாறு பிரசாதங்கள் தயாரித்து விற்பனை செய்யும் உரிமம் மற்றும் படக்கடை நடத்தும் உரிமம் மறு டெண்டர் / பொது ஏலம் எதிர் வரும் 15.07.2022 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் முன்னிலையில் நடத்தப்படும் மறு டெண்டர் / பொது ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழ் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கலந்துகொள்ளலாம்.

**பிரசாதங்கள் விற்பனை விபரம்**

| வ.எண் | பிரசாதவிபரம் | எடை | விலை |
|---|---|---|---|
| 1. | லட்டு | 50 கிராம்<br>100 கிராம் | ரூ.15.00<br>ரூ.30.00 |
| 2. | முறுக்கு | 50 கிராம்<br>100 கிராம் | ரூ.15.00<br>ரூ.30.00 |
| 3. | மிளகுவடை | 50 கிராம்<br>100 கிராம் | ரூ.15.00<br>ரூ.30.00 |
| 4. | அதிரசம் | 50 கிராம்<br>100 கிராம் | ரூ.15.00<br>ரூ.30.00 |
| 5. | சர்க்கரைபொங்கல் | 200 கிராம் | ரூ.30.00 |
| 6. | புளியோதரை | 200 கிராம் | ரூ.30.00 |
| 7. | தயிர்சாதம் | 200 கிராம் | ரூ.30.00 |
| 8. | மிளகுதோசை | 200 கிராம் | ரூ30.00 |
| 9. | கேசரி | 100 கிராம் | ரூ.30.00 |
| 10. | பேரிச்சம்பழம் | 100 கிராம் | ரூ.40.00 |

. . . . . 2 . .

## மறு டெண்டர் மற்றும் பொது ஏல நிபந்தனைகள்

1. டெண்டர் / பொது ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பிரசாதகடை நடத்தும் உரிமைக்கு ரூ.5,00,000/– ( ரூபாய் ஐந்து லட்சம் ) , படக்கடை நடத்தும் உரிமைக்கு ரூ.1,00,000/– ( ரூபாய் ஒரு லட்சம் ) டெபாசிட் தொகையாக தேசியமையமாக்கப்பட்ட வங்கியில் **Excutive Officer Arulmigu Nithya Kalyana Perumal Temple, Tiruvidanthai** என்ற பெயரில் எடுக்கப்பட்ட வரைவோலை ( Demand Draft ) ஐ உடன் இணைத்து மறு டெண்டர் / பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

2. பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவத்தில் முழுவிலாசமும் அடித்தல் திருத்தம் இல்லாமல் எழுதி சீலிட்ட கவரில் வைத்து 15.07.2022 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் போடவேண்டும். நேரம் சம்மந்தமாக ஏதேனும் விவாதம் ஏற்பட்டால் திருக்கோயில் அலுவலக கடிகாரம் காட்டும் நேரத்தை வைத்தே முடிவு செய்யப்படும்.

3, டெண்டர்கள் 15.07.2022 காலை 10.30 மணிவரை பெறப்படும். 15.07.2022 காலை 11.00 மணிக்குமேல் முதலில் ஏலம் நடத்தப்பட்டு பதிவு செய்யப்படும். பின்னர் டெண்டர் பிரிக்கப்பட்டு உயர்ந்த கேள்வி தொகை பதிவு செய்யப்படும். டெண்டர் / பொது ஏலம் உயர்ந்த தொகை முடிவு செய்யப்படும். உயர்ந்த கேள்விதாரர் அன்றே டெண்டர் / ஏலத் தொகை முழுவதும் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் டெண்டர் / ஏலம் ரத்து செய்யப்பட்டு டெபாசிட் தொகை பிடித்தம் செய்யப்படும். திருப்பித்தர பட மாட்டாது.

4. பலன் அடையாத ஏலதாரர் டெபாசிட் தொகை வரைவோலை ஏலம் முடிந்ததும் திருப்பிதரப்படும்.

5. டெண்டர் மற்றும் பொது ஏலத்தில் முடிவு செய்யப்பட்ட நடவடிகைகள் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

6. திருக்கோயிலுக்கு பாக்கியுள்ளவர்கள், திருக்கோயில் நன்மைக்கு எதிராக செயல்பட்டவர்கள் ,தகுந்த பொறுப்பு இல்லாதவர்கள் ஆகியோர் டெண்டர் மற்றும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7. டெண்டர் படிவத்திற்கு ரூ. 500/– (ரூபாய் ஐநூறு) மட்டும் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொண்டு அதில் பூர்த்தி செய்து தான் டெண்டர் கொடுக்கவேண்டும்.

8. பிரசாதகடை ஏலம் எடுப்பவர் ரூ.100/–மதிப்புள்ள பத்திரத்தில் ஒப்பந்தபத்திரம் தங்களுடைய சொந்த செலவில் எழுதித்தர வேண்டும்.

9. பிரசாத விற்பனை உரிமம் பெறுபவர் திருக்கோயில் பழக்க வழக்கத்திற்கு உட்பட்டு தானே நேரடியாக பிரசாத கடை நடத்த வேண்டும். பிரசாத விற்பனை உரிமை வேறு எவருக்கும் மாற்றவோ, பினாமி மூலம் நடத்தவோ உரிமை இல்லை. அவ்வாறு நடத்தவது தெரிய வந்தால் மேற்படி உரிமம் ரத்து செய்யப்படும்.

10. பிரசாத விற்பனை உரிமம் பெறுபவர் திருக்கோயிலால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பிரசாதங்களின் எடை, அளவு மற்றும் விலை விவரம் ஆகியவைகளை அறிவிப்பு பலகையில் வர்ணத்தில் எழுதி பொதுமக்களுக்கு நன்கு தெரியும் வகையில் பிரசாதம் விற்பனை செய்யும் இடத்தில் வைக்கவேண்டும். கூடுதல் விலைக்கு பிரசாதங்கள் விற்பனை செய்வது தெரியவந்தால் உரிமம் ரத்து செய்யப்படும்.

11. விற்பனை செய்யப்படும் பிரசாதங்களின் சுகாதரம், எடை, தரம் மற்றும் சுவையை அறியும் விதமாக விற்பனைக்கு வைத்துள்ள பிரசாதங்கள் திருக்கோயில் அலுவலகத்திற்கு தினமும் ஒரு செட் ஆய்வுக்காக அனுப்பவேண்டும்.

12. பிரசாதங்களின் எடை ,தரம், தயாரிக்கும் இடம் மற்றும் விற்பனையிடம் ஆகியவற்றை கண்காணிக்கும் உரிமை நிர்வாக அதிகாரிக்கு உண்டு. மேலும் சுகாதாரத்துறையினர் ஆய்வுக்கு உட்பட்டு விற்பனை செய்யும் பேக்கிங்கில் பிரசாத இனம் தயாரிப்பு தேதி, காலாவதி தேதி கண்டிப்பாக குறிப்பிட பட வேண்டும். மேலும் உணவுதர சான்றிதழ் பெற்ற குப்பி (கண்டைனர் பாக்ஸ்) பயன்படுத்த வேண்டும். நிபந்தனைகளுக்கு மாறாக செயல்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் உரிமத்தை ரத்து செய்ய நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு.

13. பிரசாதங்கள் தயாரிக்க உபயோகபடுத்தப்படும் பாத்திரங்கள் அவ்வப்போது ஈயம் பூசப்பட்டு சுகாதாரமாக வைத்திருக்கவேண்டும். நாள்பட்ட கெட்டுப்போன பிரசாதங்கள் கண்டிப்பாக விற்பனை செய்யக் கூடாது.

14. பிரசாதங்கள் தயாரிக்க உபயோகபடுத்தப்படும் எண்ணெய், நெய், மாவு மற்று ம்இதர பொருட்கள் தரமானதாக இருக்க வேண்டும்.

15 பிரசாத விற்பனை குத்தகை உரிமம் எடுப்பவர்கள் பிரசாத பொருட்களை துணிப்பை, வாழை இலை, பாக்கு மட்டை மற்றும் தொன்னைகளைப் பயன்படுத்தி விற்பனை செய்ய வேண்டும். கண்டிப்பாக, அரசினால் தடைசெய்யப்பட்ட பாலிதீன் பைகளை உபயோகிக்கக் கூடாது.

16. பக்தர்களுக்கும், திருக்கோயிலுக்கும் இடையூராகவும், புகார்களுக்கு இடமின்றியும் பிரசாத விற்பனை நடத்த வேண்டும்.

17. படக்கடையில் சுவாமி படங்கள், பக்தி கேசட்டுகள், ஸ்டிக்கர்ஸ், டாலர்கள் மற்றும் வழிபாட்டு பொருட்கள் வைத்து விற்பணை செய்து கொள்ளலாம்.

18. பணிபுரிபவர்கள் விலாசம் இதர விபரங்களுடன் புகைப்படம் எடுத்து தனியே அடையாள அட்டை தயாரித்து நிர்வாகத்திடம் ஒப்புதல் பெற்ற நபர்களை மட்டும் பிரசாதம் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு பயன்படுத்த வேண்டும். இதன் நகல் சரககாவல் துறைக்கு கொடுக்க வேண்டும். நிர்வாகம் ஒதுக்கும் இடத்தில் தான் விற்பனை செய்யவேண்டும். வேறு எந்த இடத்தில் விற்பனை செய்யக் கூடாது. மீறினால் உரிமத்தை ரத்து செய்யதக்காருக்கு பூரண அதிகாரம் உண்டு.

19 பிரசாதகடையில் இருந்து பிரசாதங்கள் வாங்கி சாப்பிட்ட பின்னர் சேவார்த்திகள் போடும் இலைகள், பேப்பர்களை குப்பைதொட்டிவைத்து பிரசாதகடை ஏலம் சொந்த பொறுப்பிலேயேஅப்புறபடுத்த வேண்டும்.

20. திருக்கோயில் நன்மையைக்கருதி காரணம் கூறாமல் எந்த டெண்டரையும் நிராகரிக்கவோ, ஏல, நிபந்தனைகளை தளர்த்தவோ அல்லது புதிதாக சேர்க்கவோ தேதியையும், நேரத்தையும் மாற்றவோ, இதர விவரங்களை திருக்கோயில் அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்

திரு.**கோ.சரவண்**
செயல்அலுவலர்.

திரு.**ஆ.முத்துரெத்தினவேலு.,**
தக்கார்/ உதவிஆணையர்.
காஞ்சிபுரம்

நாள் : 30.06.2022

இடம் :திருவிடந்தை